வாழ்க உண்மையுடன்  உண்மையே பேசுங்கள்

உண்மை வாய்மை மெய்மை

அறம் பொருள் இன்பம் வீடுபேறு

அறக்கல்வி கற்று நிற்போம் இந்தப் பிறவியிலேயே நம் உடம்பில் இருக்கும் இறைவர் நம்முடன் பேசுவார்



உண்மை உலகம்

யோகா ஒரு அமைதிப் பயணம்



# அறன் அறியும் அருள் கல்வி அன்பாலயம்

**உலக மக்களைச் சான்றோர்களாக்கும் கல்விச் சாலை**

**"ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய்" (தந்தை) -குறள் எண்-69**

## 47 வருட வாழ்க்கை ஆராய்ச்சியில் மணி மொழி இளங்கோ ஆகிய நான் கண்டுபிடித்த உண்மைகள்

1. மனிதன் முதன் முதலில் செய்யவேண்டிய ஒரே செயல் உண்மையை மட்டுமே பேசுவது.

2. மனிதனுடைய வாழ்க்கை 300 வருடங்கள். ஒரு மனிதன் மிக ஆரோக்கியமாக 300 வருடங்கள் வாழமுடியும். மனிதனுடைய முதல் கடமை அவன் தன் வாழ்நாளை நீட்டிக்கும் முயற்சியில் ஈடுபடுவது தான்.

3. வாழ்க்கை இன்பம் மட்டுமே நிறைந்தது. துன்பம் நாம் ஏற்படுத்திக் கொள்வது. நாம் ஏற்படுத்திக் கொண்டத் துன்பத்தை நாமே வெகுசுலபமாகப் போக்கி எந்த நிலையிலும், எந்த வயதிலும் இன்பநிலையை அடையலாம்.

4. நோய் மற்றும் துன்பம் என்பது அந்தந்த(ஒவ்வொரு) மனிதனே ஏற்படுத்திக் கொள்வது. அவர்கள் நினைத்தால் எந்த நிலையிலும், எந்த வயதிலும் நோய்களையும், துன்பங்களையும் இல்லாமல் செய்து ஆரோக்கியமாக வாழலாம்.

5. எதிர்காலத்தைப் பற்றிய எந்த ஒரு பயமோ, கலக்கமோ, வருத்தமோ, சங்கடங்களோ தேவை இல்லாதது (மெய்மை உழைப்பைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டும்).

6. பொருளாதாரத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. மெய்மை உழைப்பில் இருக்கும் பொழுது நமக்குத் தேவையான பணமும், நாம் விரும்பும் பணமும் நிச்சயமாக வந்துவிடும்.

7. உயர்நிலையாகிய இறைநிலையை அடைந்து, இந்தப் பிறவியிலேயே அறவழியில் நடந்து இறைவர் நம்முடன் பேசுவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

8. உலக சகஉயிர்கள் அனைவருக்கும் உயர்நிலையாகிய இறைவர் நம்மிடம் பேசும் நிலையை அடைவதற்காக **அறன் அறியும் அருள் கல்வி அன்பாலயம்** என்ற பாடத்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

9. இதனுடைய நோக்கம் உலக சகஉயிர்கள் அனைவரையும் சான்றோராக்கி, உலகின் இறுதிநிலையாகிய மரணமிலாப் பெருவாழ்வைப் பெறவைத்தல்

**(பாவத்தின் சம்பளம் மரணம் -ஏசுநாதர்.**

**புண்ணியத்தின் சம்பளம் மரணமிலாப்பெருவாழ்வு**

**-மணி மொழி இளங்கோ).**

10. நம் கண்முன் நடக்கும் அனைத்து நிகழ்வுகளுமே நம்மைத் திருத்துவதற்காக இறைவரால் நடத்தப்படும் நேரடி ஒளிபரப்பு.

11. நாம் சந்திக்கும் ஒவ்வொரு சகஉயிருமே அல்லது நம்மை சந்திக்கும் ஒவ்வொரு சகஉயிருமே இறைவரால் அனுப்பப்பட்ட நேரடித் தூதுவர்.

12. இதைப் புரிந்துகொண்டால் ஒவ்வொருவரின் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் இன்பமயமானது.

13. நமக்கு ஏற்பட்டுள்ள அனைத்துத் துன்பங்களையும், பொருளாதாரப் பிரச்சனைகளையும், நோய்களையும் மெய்மை உழைப்பின் மூலமாக சரிசெய்து விடலாம்.

## இறைவரை அடையத் தேவையான எட்டு நிலைகள்

1. உண்மை, வாய்மை, மெய்மையைக் கடைபிடித்து 100 சதவீதம் உலக மக்களிடம் அன்பாகவும், கருணையாகவும், இரக்கத்துடன் இருத்தல்.

2. மெய்மை உழைப்பைக் கடைபிடித்து இந்த உலக மக்கள் அனைவரிடத்திலும் மெய்மை இரக்கத்துடன் இருத்தல்.

3. மெய்மை உணவைப் பின்பற்றி இந்த உலக உயிர்கள் அனைவரிடத்தும் கருணையுடன் இருத்தல்.

4. மெய்மை உணர்வுடன் இருந்து இறைவர் நம்முடன் பேசும் நேரத்தை எதிர்நோக்கி இருத்தல்.

5. மெய்மை உறவை உணர்ந்து கொண்டு தன் மனைவியைத் தவிர உலக பெண்கள் அனைவரையும் தாயாகவும், சகோதரியாகவும், தன் மகளாகவும் நினைத்தல். மெய்மை உறவை உணர்ந்து கொண்டு தன் கணவனைத் தவிர உலக ஆண்கள் அனைவரையும் தந்தையாகவும், சகோதரனாகவும், தன் மகனாகவும் நினைத்தல். இந்த நிலையில் உங்களுக்கு 100 நற்குணங்கள் வரும்.

| | |
|---|---|
| 1 உடலின் மீது கவனம்.<br><br>2 உணவின் மீது கவனம்<br><br>3 எந்த உயிரையும் கொலை செய்யாத தன்மை | 51 தவம் செய்யும் தன்மை<br><br>52 ஜெபம் செய்யும் தன்மை<br><br>53 மகிழ்ச்சி (தெளிவு)<br><br>54 கொடைத் தன்மை |

| | |
|---|---|
| 4 எவர் பொருளையும் களவு செய்யாத தன்மை<br>5 உண்மை, வாய்மை, மெய்மை<br>6 எண்குணன்-எதிலும் ஆராய்ச்சி உடைய தன்மை<br>7 நல்ல தன்மை<br>8 அடக்கமுடையத் தன்மை<br>9 நீதி வழுவாதத் தன்மை<br>10 பகிர்ந்து உண்ணும் தன்மை<br>11 (மாசிலான்) எதிலும் குற்றமற்றத் தன்மை,<br>அறத்தன்மை<br>12 கள் உண்ணாத தன்மை<br>13 காமம் இல்லாத நிலை<br>14 ஆசை இல்லாத நிலை<br>15 மக்கள் அனைவரையும் சகோதர, சகோதரியாக நினைக்கும் அன்பு<br>16 தூய்மை<br>17 அருள்<br>18 கருணை<br>19 ஊண் சுருக்கம் (அளவோடு சாப்பிடும்<br>தன்மை, 1. இறைவர் படைத்த உணவை<br>சாப்பிடும் நிலை,<br>2. தண்ணீர் உணவு,<br>3. காற்று உணவு)<br>20 பொறுமை<br>21 நேர்மை<br>22 ஐம்புலன் அடக்கம் | 55 சிவ விரதம்<br>56 வேள்வி, சிவபூசை, சோதி தரிசனம் என்பதன் உண்மை விளக்கம்<br>57 பொது நலம்<br>58 கனிவு<br>59 அனைத்து நற்குணங்கள்<br>60 சுத்தம்<br>61 தொண்டு செய்தல்<br>62 மன தைரியம்<br>63 அகங்காரம் இன்மை<br>64 அவசரம் இன்மை<br>65 சோம்பேறித்தனம் இன்மை<br>66 ஒத்திப்போடுதல் இல்லாமை<br>67 தயக்கமின்மை<br>68 கூச்சமின்மை<br>69 நடுக்கமின்மை<br>70 பயமின்மை<br>71 கஞ்சத்தனமின்மை<br>72 சுதந்திர தன்மை<br>73 உங்கள் தலைவரை உணருதல்<br>74 புகழுக்கு அடிமையாகாத தன்மை<br>75 மரியாதை<br>76 சீவகாருண்ய ஒழுக்கம்<br>77 தன் நிறைவு<br>78 போதும் என்ற மனம்<br>79 சமாதானம் |

| | |
|---|---|
| 23 மன ஒடுக்கம் | 80 இனிய சொற்கள் |
| 24 குழப்பம் இன்மை | 81 இங்கீதம் |
| 25 மன்னிக்கும் குணம் | 82 ஆசை இன்மை |
| 26 கெடுதல்களை மறத்தல் | 83 கோபமின்மை |
| 27 துன்பத்தை உணர்தல் | 84 தெய்வ நம்பிக்கை |
| 28 தெளிவு | 85 உதவி செய்யும் தன்மை |
| 29 நிதானம் | 86 இன்பம் (தெளிவு) |
| 30 உறுதி | 87 துன்பமின்மை |
| 31 விடாமுயற்சி | 88 திருப்தி-தெளிவு |
| 32 விட்டுக்கொடுத்தல் | 89 நிம்மதி-தெளிவு |
| 33 பணிவு | 90 நிறைவு-தெளிவு |
| 34 நேரத்தின் அருமை | 91 ஆணவமின்மை |
| 35 நாணயம் | 92 வெளிப்படைத் தன்மை |
| 36 பயனில் சொல்லாமை | 93 இடம், பொருள், ஏவல் |
| 37 முழுமை | 94 மனக்கவலை இன்மை |
| 38 அமைதி | 95 பயமற்ற தன்மை |
| 39 இரக்கம் | 96 சாபமிடாத தன்மை |
| 40 அன்பு | 97 எதிலும் உண்மைப் பொருள் காணுதல் |
| 41 அடக்கம் | 98 எந்த நிலையிலும் வாழும் தன்மை |
| 42 விருந்தோம்பல் | 99 எண்ணங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருத்தல் |
| 43 தானம் | 100 எவரிடமும் பிச்சையாக எதுவும் பெறாத தன்மை (இறைவரிடமும் எதையும் கேட்கக்கூடாது. நன்றியை மட்டும் தான் 24 மணி நேரமும் சொல்லிக்கொண்டே இருந்து நாம் எதற்காக படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைச் சிந்தித்துக் கொண்டே இருத்தல்). |
| 44 தர்மம் | |
| 45 அவமானத்தைத் தாங்கிக் கொள்ளும் தன்மை | |
| 46 எதிர்மறை எண்ணங்கள் வராது | |
| 47 புறங்கூறாமை | |

| | |
|---|---|
| 48 பொறாமை இன்மை<br><br>49 உறுதியுடைமை ஆகியவற்றை வளர்க்கும் தன்மை<br><br>50 ஏனைய காமம், களவு, உயிர்க்கொலை ஆகியவற்றை தீமை என உணரும் தன்மை | |

6. இறைவர் நம் உடம்பில் இருக்கும் இடத்தைச் சித்தர்கள் காட்டிய வழிமுறையில் சான்றோர்கள் மூலம் தெரிந்து கொள்ள முயற்சி செய்தல்.

7. இந்த உலகில் நாம் கற்றுக் கொண்ட அனைத்து அறிவுகளையும் (பொருள் அறிவு, அருள் அறிவு) விளக்கி உலக மக்களுக்குக் கூறி, இறைவர் நம்முடன் பேசுவதற்கு உலக மக்களைத் தயார் செய்தல். இதுவே உங்களுடைய முதல் கடமை.

**தாள்ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு**

**வேளாண்மை செய்தல் பொருட்டு**

இந்த மண்ணில் நாம் தேடிய பொருட் செல்வம், அறிவுச் செல்வம் போன்ற அனைத்தும் தகுதியுள்ளோரிடம் விதைத்து விட்டுச் செல்வதற்கேயாகும்.

8. இந்த உலகில் 100 சதவீத இன்பத்துடன் வாழ்ந்து, 100 சதவீதம் கோபத்தை விட்டு, 100 சதவீதம் உலக மக்கள் அனைவரிடமும் அன்புகாட்டி, 100 சதவீதம் பழிசெயல்களுக்கு அஞ்சி, நாணத்துடன், 100 சதவீதம் உலக மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன், 100 சதவீதம் உலக மக்களின் மேல் கருணை, இரக்கத்துடன், 100 சதவீதம் வாய்மையுடன் இந்த உலகில் திருப்தி, நிம்மதி, நிறைவுடன் வாழ்ந்து, 100 சதவீதம் அறக்கல்வியைக் கற்று, 100 சதவீதம் அறிவுக் கல்வியைக் கற்று, பெற்று, 100 சதவீதம் அருள் கல்வி, பொருள் கல்வியை அடைந்து, 100 சதவீதம் அன்புக் கல்வியை அறிந்து, 100 சதவீதம் ஆலயக் கல்வியை அறிந்து, 60 வயதிற்கு மேல் எப்பொழுது வேண்டுமானாலும் நம்மைப் படைத்த இறைவருடன், இந்த உலகுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிற இறைவருடன், இந்த உலகை வாழவைத்துக் கொண்டிருக்கக்கூடிய, நம் உடம்பில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இறைவருடன், நம் உள்ளத்தில் வாழ்நாள் முழுவதும் இருக்கும் இறைவருடன், நம்மை விட்டுப் பிரிய நினைக்காத இறைவருடன் நாம் எப்பொழுது வேண்டுமானாலும் சேரலாம்.



